


புதுகை
# வரலாறு நாளிதழ்
WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351






## மக்கள் மது அருந்துவதை நிறுத்துவதால் டாஸ்மாக் வருவாய் குறைவு

# டோன்ட் ஒரி

## மக்கள் தவறான பாதைக்கு செல்வதை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## வருமானத்தை அதிகரிப்பது நோக்கமல்ல : அமைச்சர் முத்துசாமி

**சென்னை, ஜூலை. 11–**

**“மக்கள் மது குடிப்பதை நிறுத்துவதன் மூலம் டாஸ்மாக் வருமானம் குறைந்தால் பிரச்சினை இல்லை” என்று அமைச்சர் முத்துசாமி தெரிவித்தார்.**



தமிழகத்தில் 500 மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் கண்டறியப்பட்டு மூடப்படும் என்று சட்டப்பேரவையில் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மானியக் கோரிக்கையின் போது முன்னாள் மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் செந்தில் பாலாஜி அறிவித்தார். அந்த அறிவிப்பிற்கிணங்க 500 மதுபான சில்லறை விற்பனைக் கடைகளைக் கண்டறிந்து மூடிட அரசாணை வெளியிடப்பட்டது. இந்த அரசாணையை செயல்படுத்தும் விதமாக மாநிலம் முழுவதும் உள்ள மதுபான சில்லறை விற்பனைக்கடைகளில் 500 கடைகளைக் கண்டறிந்து அவற்றை கடந்த 22.6.2023 அன்று முதல் மூட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மேலும், டாஸ்மாக் கடைகளுக்கு அருகில் செயல்பட்டு வந்த சட்ட விரோத பார்களும் மூடப்பட்டன.

இதன் காரணமாக, டாஸ்மாக்கில் தினசரி வருவாய் ரூ.35 கோடி வரை குறைந்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. வழக்கமாக, தமிழகம் முழுவதும் உள்ள டாஸ்மாக் கடைகளில் தினசரி ரூ.150 கோடிக்கு மது விற்பனை நடைபெறும். ஆனால், தற்போது ரூ.110 முதல் ரூ.120 கோடி தான் தினசரி விற்பனை நடைபெறுவதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், டாஸ்மாக் நிர்வாகம் தொடர்பாக தமிழக வீட்டு வசதித்துறை மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் முத்துசாமி தலைமையில் நேற்று ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து அமைச்சர் செய்தியாளர்களிடம் அவர் கூறுகையில், "பணியாளர்களின் பிரச்சினையை தீர்ப்பதுதான் எங்களின் முதல் நடவடிக்கை. டாஸ்மாக் கடைகள் பாதுகாப்பாக இருக்க வேண்டும். டாஸ்மாக் கடைகளில் வசூலாகும் பணத்தை, வங்கி அதிகாரிகள் நேரடியாக வந்து வாங்கிக்கொள்வது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

உரிமம் உள்ளவர்கள் மட்டும்தான் பார் நடத்த முடியும். உரிமம் பெற்றவர்கள் விதிகளை பின்பற்றிதான் நடத்த வேண்டும். அதிகாரிகள் இதைக் கண்காணித்து வருகிறார்கள். உரிமம் இல்லாமல் நடத்தினால் நடவடிக்கைஎடுக்கப்படும்.

டாஸ்மாக் மூலம் வருமானத்தை ஈட்டுவது இலக்கு இல்லை. 500 டாஸ்மாக் கடைகள் மூடப்பட்டுள்ளதால், மக்கள் தவறான பாதைக்கு செல்வதை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வருமானத்தை அதிகரிப்பதுநோக்கமல்ல, தவறான பாதைக்கு சென்றுவிடாமல் தடுப்பதுதான் நோக்கம். குடிப்பதை நிறுத்தி, அதனால் வருமானம் குறைந்தால் பிரச்சினை இல்லை.

டெட்ராபேக்கில் மதுபானம்விற்கப்படுவதை மக்கள் விரும்புகின்றனர். டெட்ராபேக்கில் மதுபானம் கொண்டு வந்தால் கண்ணாடி பாட்டில் பயன்பாட்டை குறைக்க முடியும். கண்ணாடி பாட்டில் மது பலருக்கு பிரச்சினையாக உள்ளதால் டெட்ரா பேக்கில் மது கொண்டு வர முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது. டாஸ்மாக் கடைக்கான நேரத்தை மாற்றியமைப்பது குறித்து முடிவு செய்யவில்லை. டாஸ்மாக் கடைகளில் கேமரா பொருத்த உத்தரவிடப்பட்டுள்ளது" என்று அவர் கூறினார்.

## 1,250 கிராம கோவில்களில் திருப்பணிக்கு ரூ.50 கோடி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்

**சென்னை, ஜூலை. 11–**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில் இந்து சமய அறநிலையத் துறை சார்பில், 2022-2023-ம் ஆண்டிற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள 1,250 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலுள்ள கோவில்கள் மற்றும் 1,250 கிராமப்புற கோவில்களில் திருப்பணிகளை மேற்கொள்ள 2 லட்சம் ரூபாய் வீதம் 50 கோடி ரூபாய் வழங்கிடும் அடையாளமாக 20 கோவில்களின் நிர்வாகிகள் மற்றும் பூசாரிகளிடம் கோவில் திருப்பணிகள் மேற்கொள்ள வரைவோலைகளை வழங்கினார்.

அதனை தொடர்ந்து தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தின் சார்பில் பதிவு பெற்ற 500 பெண் ஓட்டுநர்களுக்கு புதிய ஆட்டோ ரிக்சா வாங்குவதற்காக தலா ரூ.1 லட்சம் மானியம் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்து, 10 பயனாளிகளுக்கு இத்திட்டத்தின் கீழ் வாங்கப்பட்ட புதிய ஆட்டோ ரிக்சாக்களுக்கான பதிவு சான்று மற்றும் அனுமதி ஆவணங்களை முதல்வர் வழங்கினார்.

நிகழ்ச்சியில், அமைச்சர்கள் பி.கே. சேகர்பாபு, சி.வெ. கணேசன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முகமது நசிமுத்தின் ஆகியோர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் வன்கொடுமை தடுப்பு குறித்த மாவட்ட விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா, தலைமையில் நேற்று நடைபெற்றது. உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வந்திதா பாண்டே, மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் கருணாகரன் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.



புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஒன்றியத்தில், நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் ஆலங்குடி-ஆலங்காடு சாலையில் மரக்கன்றுகளை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் நேற்று நட்டார். உடன் வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், உதவி கோட்டப் பொறியாளர் ரவிச்சந்திரன், உதவிப் பொறியாளர் சுகந்தி, ஊராட்சிமன்றத் தலைவர் நாராயணன், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.






# இன்று

# 11-7-23



சோபகிருது ஆனி 26 | JUL - TUE செவ்வாய் | துல்ஹிஜ்ஜா 22 | தேய்பிறை 192 / 173

சக வருடம் 1945 ஆஷாடம் 20

தேய். நவமி 41.56 (மா. 10.45) அசுபதி 44.36 (மா. 11.49) தியாஜ் 34.58 அகஸ் 31.21 சித்த. இராமேஸ்வரம் பர்வதவர்த்தினியம்மன் சேது மாதவர் சன்னதிக்கு விநாயகப் பெருமான் எழுந்தருளி ஆராதனை. சுவாமிமலை ஸ்ரீமுருகப்பெருமான் பேராயிரம் கொண்ட தங்கப் பூமாலை சூடியருளல்.

| | நல்லநேரம் | கௌ.ந.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 7.45-8.45 | 10.45-11.45 | 03.00 | 12.00 | 09.00 |
| மாலை | 4.45-5.45 | 7.30-8.30 | 04.30 | 01.30 | 10.30 |

சூலம் : வடக்கு; பரிகாரம் : பால்; மிதுன லக்னம் இருப்பு நா. 1 வி. 01; சந்திராஷ்டமம் பூரம் உத்திரம்; கரணம் : 7.30-9; சூரிய உதயம் : 5.59

போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து

**இராசிபலன்**

மேஷம் - வரவு
ரிஷபம் - எதிர்ப்பு
மிதுனம் - சினம்
கடகம் - வாழ்வு
சிம்மம் - மகிழ்ச்சி
கன்னி - லாபம்
துலாம் - துன்பம்
விருச்சி - அமைதி
தனுசு - உயர்வு
மகரம் - சிரமம்
கும்பம் - சாந்தம்
மீனம் - சாதனை

## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# 2 நாட்கள் சுற்றுப்பயணமாக பிரதமர் மோடி 13–ந்தேதி பிரான்ஸ் செல்கிறார்

டெல்லி, ஜூலை11–

தலைநகர் பாரீசில் வருகிற 14–ந்தேதி அந்நாட்டு தேசிய தினம் கொண்டாடப்படுகிறது. இந்த விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ளுமாறு பிரதமர் மோடிக்கு பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான் அழைப்பு விடுத்தார். இந்த அழைப்பை ஏற்று பிரதமர் மோடி வருகிற 13–ந்தேதி (வியாழக்கிழமை) பிரான்ஸ் செல்கிறார். அவரை அதிபர் மேக்ரான் வரவேற்கிறார்.



அன்று அவர் பாரீஸ் புறநகர் பகுதியில் உள்ள இயற்கை எழில் கொஞ்சும் செய்ன் ஆற்றில் உள்ள தீவில் இந்திய தூதரகம் மற்றும் கலாச்சார அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ள கலை நிகழ்ச்சியில் பங்கேற்கிறார். இந்திய வம்சாவளியினர் மத்தியில் அவர் உரையாற்றுவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. அன்று பிரான்ஸ் அதிபர் மேக்ரான் தனது அதிகாரபூர்வ இல்லமான எலிசி அரண்மனையில் விருந்து அளிக்கிறார். இந்த விருந்தின் போது இருநாட்டு தலைவர்களும் பல்வேறு விஷயங்கள் குறித்து பேசுகின்றனர். மறுநாள் அவர் தேசிய தின விழா அணிவகுப்பு நிகழ்ச்சியில் பங்கேற்கிறார்.

இந்தியா-பிரான்ஸ் இடையே உள்ள உறவின் 25-ம் ஆண்டையொட்டி நடைபெறும் இந்த பிரமாண்ட அணிவகுப்பு நிகழ்ச்சியில் 269 பேர் கொண்ட இந்திய பாதுகாப்பு படைகுழுவும் கலந்து கொள்ள உள்ளது. இதற்கான அணிவகுப்பு ஒத்திகை நடந்து வருகிறது. இந்த சுற்றுப்பயணத்தின் போது பிரதமர் மோடியும், பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரானும் சந்தித்து பேச உள்ளனர். கால நிலை மாற்றம், பல்லுயிர் பெருக்க இழப்பு உள்ளிட்ட பிரச்சனைகள், இருநாட்டு நல்லுறவு குறித்தும் அவர்கள் விவாதிக்க இருக்கிறார்கள்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த சந்திப்பின் போது முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாக இருக்கிறது. ராணுவ தளங்களின் கூட்டு தயாரிப்பு, இந்திய கடற்படையில் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஐ.என்.எஸ். போர் விமானங்களுக்கு ரபேல் மரைன் போர் விமானங்கள் வாங்குவது தொடர்பான ஒப்பந்தம் கையெழுத்தாக உள்ளது.

# வேம்பேடு கிராமத்தில் டிராக்டர் மூலம் சவுடு மண் கடத்திய இருவர் சிறையில் அடைப்பு

ஊத்துக்கோட்டை, ஜூலை11–

திருவள்ளூர் மாவட்டம், பூண்டி ஒன்றியம், மெய்யூர் ஊராட்சியை சேர்ந்த வேம்பேடு கிராமத்தில் அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் குளம் ஒன்று தூர்வாரப்பட்டது. இந்நிலையில், இந்தக் குளத்தில் இருந்து டிராக்டர் மூலம் இருவர் சவுடு மண் கடத்தியதாக வேம்பேடு கிராம நிர்வாக அதிகாரி அதிசயகுமார் பெரியபாளையம் காவல் நிலையத்தில் புகார் செய்தார்.



எனவே, போலீஸ் இன்ஸ்பெக்டர் வெங்கடேசன் தலைமையில் போலீசார் வழக்கு பதிவு செய்து சவுடு மண் கடத்திய வேம்பேடு கிராமத்தைச் சேர்ந்தவர்களான, மேட்டு தெரு சுரேஷ்(வயது47), விநாயகர் கோவில் தெரு மணிகண்டன்(வயது30) ஆகிய இருவரையும் கைது செய்து சவுடு மண் கடத்தலுக்கு பயன்படுத்திய டிராக்கரை பறிமுதல் செய்து காவல் நிலையம் கொண்டு வந்தனர். குற்றவாளிகள் மீது வழக்கு பதிவு செய்து ஊத்துக்கோட்டை முதல் நிலை குற்றவியல் நீதிமன்ற மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் நேற்று ஆஜர் செய்து திருவள்ளூர் கிளை சிறையில் அடைத்தனர்.






▶ காரைக்கால் மாவட்டம் நிரவி பகுதியில் இயங்கி வரும் கேந்திர வித்யாலயா பள்ளியை நேற்று ஆட்சியர் ஆய்வு மேற்கொண்டார். 12-ஆம் வகுப்பு வரை இயங்கும் இப்பள்ளியில் பல்வேறு இடங்களையும் பள்ளி கட்டிடங்களையும் பார்வையிட்ட ஆட்சியர் குலோத்துங்கன், மாணவர்கள் பயன்படுத்தும் வகுப்பறை மற்றும் கழிப்பறை போன்றவற்றையும் ஆய்வு மேற்கொண்டார். மேலும் மாணவர்களிடம் ஏதேனும் குறைகள் உள்ளனவா என்பன குறித்தும் கேட்டறிந்த ஆட்சியர் நீங்கள் நன்கு படித்து நல்ல நிலைக்கு வர வேண்டும் எனவும் மாணவர்களை கேட்டுக் கொண்டார். இந்த ஆய்வின் போது முதல்வர் மற்றும் ஆசிரியர்கள் உடன் இருந்தனர்.

# புதுச்சேரியில் கேஸ் சிலிண்டருக்கு ரூ.300 மானியம் வழங்க கவர்னர் தமிழிசை சவுந்தரராஜன் ஒப்புதல்

புதுச்சேரி, ஜூலை11–

புதுச்சேரியில் கேஸ் சிலிண்டருக்கு ரூ.300 மானியம் வழங்க துணை நிலை கவர்னர் தமிழிசை சவுந்தரராஜன் ஒப்புதல் அளித்துள்ளார்.



புதுச்சேரி மாநிலத்தில் உள்ள அனைத்து குடும்ப அட்டை தாரர்களுக்கும் மாதம் ஒரு வீட்டு உபயோக சிலிண்டருக்கு ரூ.300 மானியம் வழங்கப்படும் என கடந்த சட்டப்பேரவை கூட்டத்தொடரில் முதல்வர் ரங்கசாமி அறிவித்திருந்தார்.

இந்த நிலையில், வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள சிவப்பு அட்டைதாரர்களுக்கு ஆண்டுக்கு 12 சிலிண்டர்களுக்கு தலா ரூ.300 மானியம் வழங்கப்படும் என்றும் வறுமை கோட்டிற்கு மேல் உள்ள மஞ்சள் அட்டை தாரர்களுக்கு சிலிண்டருக்கு ரூ.150 மானியம் வழங்க துணை நிலை கவர்னர் தமிழிசை சவுந்தரராஜன் ஒப்புதல் அளித்துள்ளார். இதற்கான அரசாணையும் வெளியிடப்பட்டுள்ளது. இந்த அரசாணை அரசிதழில் வெளியிடப்பட்டவுடன் உடனடியாக அமலுக்கு வரும் எனவும், இந்த மானியத்தொகை அவரவர் வங்கிக்கணக்கில் செலுத்தப்படும் என புதுச்சேரி அரசு அறிவித்துள்ளது.

# அருள்மிகு ஸ்ரீ ஆதிகேசவ பெருமாள் ஆலய மகா கும்பாபிஷேகம்

**திருவள்ளூர் , ஜூலை11–**

*திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், தேக்கன் காலனி, வெள்ளிவாயல் சாவடி பகுதியில் எழுந்தருளி அருள் பாலித்து வரும் அருள்மிகு ஸ்ரீ ஆதிகேசவ பெருமாள் ஆலய புனராவர்த்தன ஜீர்ணோத்தாரண மகா கும்பாபிஷேகம், மங்கள வாத்தியத்துடன் யாக சாலையிலிருந்து பூஜித்த புனித கலச நீர் சிவாச்சாரியார் மூலமாக கோபுர கலசத்தின் மேல் கொண்டு செல்லப்பட்டு புனித நீரானது கோபுரத்தின் மேல் ஊற்றி பின்பு பொதுமக்கள் மேலே தெளித்தனர். அந்த நிகழ்ச்சி வெகு விமர்சையாக நடைபெற்றது.*



*கும்பாபிஷேக விழாவினை தொடர்ந்து, தீபாராதனை, தீர்த்த பிரசாதம் வழங்குதல், மகா அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து சிறப்பு அன்னதானமும் வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. கும்பாபிஷேக விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஆலய நிர்வாகிகள் மற்றும் கும்பாபிஷேக திருப்பணி குழுவினர், சிறப்பாக செய்திருந்தனர்.*




▶ திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், ஆரணி பஜார் வீதியில் புகழ்பெற்ற ஸ்ரீ ராமலிங்க சாமுண்டேஸ்வரி திருக்கோவில் உள்ளது. இக்கோவிலின் மகா கும்பாபிஷேகம் கடந்த மே 24-ம் தேதி நடைபெற்றது. இந்நிலையில், மண்டல அபிஷேக நிறைவு விழா நடைபெற்றது. இதை முன்னிட்டு சாமுண்டேஸ்வரி அம்மன் சிம்ம வாகனத்தில் திருவிதி உலா வந்தபோது எடுத்த படம்.

# தாராட்சி கிராமம் ஸ்ரீ நூக்காள பரமேஸ்வரி அம்மன் திருக்கோவிலின் திருவிழா நடைபெற்றது

ஊத்துக்கோட்டை, ஜூலை11–

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம்,தாராட்சி கிராமத்தில் சுயம்பாக பால்குடத்தில் எழுந்தருளி இருக்கும் அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகி ஸ்ரீ நூக்காள பரமேஸ்வரி அம்மன் திருக்கோவில் உள்ளது.



இக்கோவிலில் இரவு ஊர் திருவிழா நடைபெற்றது. இதை முன்னிட்டு அன்று மதியம் தாராட்சி குளக்கரையில் கங்கை திரட்டுதல் மற்றும் பொங்கல் வைத்து அபிஷேகம் செய்யும் நிகழ்ச்சி நடைபெற்றது. பின்னர்,வன்னி மரத்துக்கு காப்பு கட்டும் நிகழ்ச்சி நடைபெற்றது.இரவு கோவில் வளாகத்தில் அனைத்து பக்தர்களுக்கும் அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதைத்தொடர்ந்து பூக்களாலும், மின்விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்ட அம்மன் சிம்ம வாகனத்தில் மங்கள வாத்தியம்–கைலாய வாத்தியம் முழங்க,வான வேடிக்கையுடன் முக்கிய வீதிகளின் வழியாக திருவீதி உலா வரும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், தாராட்சி சுற்றுவட்டாரத்தைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் தங்களது குடும்பத்துடன் கலந்து கொண்டனர்.நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கோயிலின் தர்மகர்த்தா கி.கணபதி யாதவ், நிர்வாக அறங்காவலர் லோகநாதன் ஆகியோர் தலைமையில் கிராம மக்கள் மற்றும் விழா குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர்.

# 29 ஆண்டுகளாக இலவச சிலம்ப பயிற்சி அளித்து வரும் புதுச்சேரி பழனிவேல்!

புதுச்சேரி, ஜூலை11–

புதுச்சேரி பூரணாங்குப்பத்தைச் சேர்ந்த பழனிவேல் என்பவர், இப்பகுதி இளைஞர்களுக்கு கடந்த 29 ஆண்டுகளாக இலவசமாக சிலம்ப பயிற்சி அளித்து வருகிறார்.

"நான் கற்றக் கலை என்னோடு முடிந்து போகாமல், பிறருக்கும் பயனளிக்கும் வகையில் தொடர வேண்டும். அதற்காகவே சிலம்பக் கலையை சொல்லித் தந்து பல வீரர்களை உருவாக்கி வருகிறேன்" என்று சொல்லும் பழனிவேல், இப்பகுதியில் இருந்து 13 சிலம்ப மாஸ்டர்களையும் உருவாக்கியிருக்கிறார்.

உடல் ஆரோக்கியம், மன தைரியம், நல்லொழுக்கம் இவைகளை அதிகரிக்க ஏதேனும் ஒரு விளையாட்டுப் பயிற்சி கற்பது மிக அவசியம். அதிலும் வீரத்துடன் கூடிய சிலம்பம் உள்ளிட்டப் பயிற்சியை கற்கும் போது இன்னுமே தைரியம், நல்லொழுக்கம் மேம்படும். இது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படும் அனுபவ உண்மை.



வேறு வேறு பண்பாட்டுக் கூறுகளின் தாக்கத்தால், சிலம்ப பயிற்சிக்கான ஆசிரியர்கள் குறைந்து வரும் சூழலில், அதைப் பேணி, அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்வோர் வெகு சிலரே. அவர்களில் ஒருவர் இந்த பழனிவேல். சிலம்பத்திற்கென தனிக்கழகம் ஒன்றைத் தொடங்கி, கடந்த 21 ஆண்டுகளாக அதைச் செயல்படுத்தி வருகிறார்.

பழனிவேல் சிலம்பம் கற்றுத் தரும் இடத்துக்கு சென்று பார்வையிட்டோம். இரு பாலினச் சிறார்களும் ஆர்வத்துடன் கற்றுக் கொண்டிருந்தனர். அந்தச் சூழலுக்கு நடுவில் அவர் நம்மிடம் பேசினார். "என்னுடைய 14 வயதில் சிலம்பம் சுற்ற கற்றுக் கொண்டேன். தற்போது எனக்கு 50 வயதாகிறது. கடந்த 1994-ம் ஆண்டு எங்கள் கிராமத்து இளைஞர்கள் மற்றும் பள்ளி மாணவர்களுக்கு இந்த இலவசப் பயிற்சியை தொடங்கினேன்.

தொடர்ந்து நாள்தோறும் மாலையில் இந்தப் பயிற்சியை அளித்து வருகிறேன். 2002-ல் மாமல்லன் சிலம்பம் மற்றும் நாட்டுப்புற கலை வளர்ச்சி கழகத்தை உருவாக்கி அடுத்த கட்டத்துக்கு நகர்ந்தேன். 21 ஆண்டுகளாக 45 நாட்கள் நடைபெறும் கோடைகால பயிற்சி முகாமையும் இலவசமாக நடத்தி வருகிறேன்.

இந்த முகாம் மூலம் ஆண்டு தோறும் ஏறக்குறைய 100 பேர் வரை பயிற்சி பெறுகின்றனர். இதுவரை 13 மாஸ்டர்களை உருவாக்கியுள்ளேன். அவர்களும் இப்போது பலருக்கும் பயிற்சி அளித்து வருகின்றனர். மனதுக்கு நிறைவாக இருக்கிறது" என்றார். ஆண்டுதோறும் சிலம்பக் கலை விழா நடத்தி பயிற்சி பெறுவோருக்கு சான்று, விருதுகளும் அளித்து வரும் பழனிவேல், இந்திய சிலம்பாட்ட கழகத்துடன் இணைந்து 2002-ல் 6 நாடுகள் பங்கேற்ற சர்வதேச சிலம்பப் போட்டியில் பங்கேற்றுள்ளார்.

டெல்லி, அந்தமான், லட்சத்தீவு, தமிழகம் உள்ளிட்ட இடங்களுக்குச் சென்று நாட்டுப்புற கலை நிகழ்ச்சிகளில் சிலம்ப பயிற்சியை செய்து வருகிறார். கடந்த 2015-ல் புதுச்சேரி அரசு இவருக்கு நாட்டுப்புற கலை மாமணி விருது வழங்கி சிறப்பித்தது. யூடியூப் போன்ற சமூக வலை தளங்களிலும் தன் பயிற்சியை பதிவிட்டு பயிற்சி அளிக்கிறார்.

# சென்னை அயனாவரத்தில் காவலர் தூக்கிட்டு தற்கொலை போலீஸ் விசாரணை

சென்னை, ஜூலை.11–

சென்னை அயனாவரத்தில் காவலர் அருண்குமார் சீருடையுடன் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். அருண்குமார் தற்கொலைக்கான காரணம் குறித்து அயனாவரம் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



சென்னை அயனாவரம் ஆயுதப்படையின் குதிரைப் படைப் பிரிவில் பணியாற்றி வந்த காவலர் அருண்குமார். இந்நிலையில், நேற்று வழக்கம்போல், சீருடையில் பணிக்கு கிளம்பிய அருண்குமார், தனது வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார்.

இச்சம்பவம் குறித்து தகவலறிந்து வந்த அயனாவரம் போலீஸார், காவலர் அருண்குமாரின் உடலைக் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், காவலர் அருண்குமார், பணிச்சுமை காரணமாக தற்கொலை செய்து கொண்டாரா அல்லது குடும்ப பிரச்சினை ஏதாவது காரணமா என்ற கோணத்தில் போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

முன்னதாக, கோவை சரக காவல் துறை டிஐஜியாக பணியாற்றி வந்த சி.விஜயகுமார் ஜூலை 7-ம் தேதி துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டார். இதைத்தொடர்ந்து தமிழக காவல் துறை டிஜிபி சங்கர் ஜிவால், தலைமையில் காவல் துறையினரின் மன அழுத்தம் போக்குவது தொடர்பாக ஆலோசனைக் கூட்டம் நடத்தினார்.

மேலும், காவலர்களுக்கு உடனடியாக விடுப்பு வழங்க வேண்டும், அவ்வப்போது காவலர்களின் மன அழுத்தத்தைப் போக்கும் வகையில் புத்துணர்வு நிகழ்வுகளை ஒருங்கிணைக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு வழிகாட்டுதல்களை காவலர்களுக்கு டிஜிபி வழங்கியிருந்தார். இந்நிலையில், டிஐஜி விஜயகுமார் தற்கொலை நிகழ்ந்த சில நாட்களில், சீருடையில் காவலர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ள சம்பவம் காவல் துறையினர் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும், சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

# கவர்னரை வில்லன் போல் காட்ட தி.மு.க.வினர் முயற்சி செய்கிறார்கள் அண்ணாமலை பேட்டி

கோவை, ஜூலை.11–

இங்கிலாந்தில் படிக்க சென்ற கோவையை சேர்ந்த ஜீவந்த் என்ற என்ஜினீயர் மர்மமான முறையில் உயிரிழந்தார். அவரது உடல் சிலநாட்களுக்கு முன்பு கோவை கொண்டு வரப்பட்டு தகனம் செய்யப்பட்டது. ஜீவந்தின் குடும்பத்திற்கு ஆறுதல் தெரிவிப்பதற்காக பா.ஜ.க தலைவர் அண்ணாமலை நேற்று கோவை வந்தார். அவர் கோவை விமான நிலையத்தில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:- தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கவர்னர் ஆர்.என்.ரவி குறித்து ஜனாதிபதிக்கு புகார் கடிதம் ஒன்றை எழுதி உள்ளார். அந்த கடிதத்தை பார்த்த போது, அதில் உள்ள தகவல்கள் முன்னுக்குப்பின் முரணாகவே இருக்கிறது.



அவர் எழுதிய கடிதமானது வருகிற 2024-ம் ஆண்டு பாராளுமன்ற தேர்தல் தோல்வி பயம் காரணமாக எழுதப்பட்ட கடிதமாகவே பார்க்கப்படுகிறது. அந்த கடிதமானது முதலமைச்சரின் இயலாமையை தான் காட்டுகிறது. தமிழகத்தின் உண்மையான நிலைமைய பிரதி பலிக்கும் விதமாக அவரது கடிதம் இல்லை. முதலில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கண்ணாடியில் பார்த்து தன்னை சுய பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். ஏனென்றால் தமிழகத்தில் எவ்வளவோ பிரச்சினைகள் இருக்கிறது. இவர்கள் தேர்தலின் போது பல வாக்குறுதிகளை அள்ளி வீசினார்கள். அந்த வாக்குறுதிகளில் பல வாக்குறுதிகள் இன்னும் நிறைவேற்றப்படாமலே உள்ளது.

இந்த வாக்குறுதிகளை எல்லாம் நிறைவேற்றுவதை விட்டு விட்டும், மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணியை ஆற்றாமலும், எப்போது பார்த்தாலும் கவர்னர் என்ன சொல்கிறார். அதில் என்ன குறை கண்டுபிடிக்கலாம் என்பதிலும், அவரை சீண்டி பார்ப்பதிலுமே தங்களது நேரத்தை தி.மு.க. அரசானது செலவிட்டு வருகிறது.

கவர்னர் செந்தில் பாலாஜியை அமைச்சரவையில் இருந்து நீக்கியதை முதலமைச்சர் மற்றும் அவரது கட்சியினர் தவறு என்று சொல்கின்றனர். இது தொடர்பாக விவாதிப்பதற்கு நேரம் இருக்கிறது. அப்போது நாம் அது பற்றி பேசிக் கொள்ளலாம். அமைச்சரை நீக்குவதற்கு அதிகாரம் இல்லை என்று சொல்லக்கூடிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், தான் எதிர்க்கட்சி தலைவராக இருந்த போது, கவர்னரை சந்தித்து அப்போது அமைச்சர்களாக இருந்தவர்கள் மீது நடவடிக்கை எடுத்து அவர்களை நீக்க வலியுறுத்தியது ஏன்? அப்போது மட்டும் கவர்னருக்கு அதிகாரம் இருந்தது. தற்போது அவருக்கு அதிகாரம் இல்லையா? தி.மு.க.வினர் ஏதோ செந்தில்பாலாஜி என்னவோ ஒரு உத்தமர் போலவும், அவரை ஒரு புத்தர் போலவும், தமிழகத்தை காக்க வந்த சேவகராவும் கூறி வருகின்றனர். முதலமைச்சர் எழுதிய கடிதத்திலும் செந்தில்பாலாஜியை புத்தராக நினைத்து அதில் கருத்துக்களை தெரிவித்து அனுப்பி இருக்கின்றனர். தாங்கள் செய்யக் கூடிய தவறுகள் அனைத்தையும் மறைப்பதற்காக கவர்னரை ஒரு வில்லனை போல காட்ட தி.மு.க.வினர் முயற்சித்து வருகிறார்கள். தி.மு.க.வினர் கவர்னருக்கு எப்போதும் மரியாதை கொடுப்பதில்லை. எப்போதுமே தி.மு.க.வினர் கவர்னரை ஒருமையில் பேசுவது, தரக்குறைவாக விமர்சிப்பது போன்ற செயல்களிலேயே ஈடுபட்டு வருகிறார்கள். முதலில் அவரது பதவிக்கு மரியாதை கொடுத்து பேசுவதற்கு தி.மு.க. எம்.பிக்கள், எம்.எல்.ஏக்கள் மற்றும் கட்சியினர் கற்று கொள்ள வேண்டும்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு தேர்தல் தோல்வி பயம் வந்துவிட்டது. அதன் வெளிப்பாடே கவர்னரை பற்றிய இந்த கடிதம். மற்றபடி அவர் தமிழகத்தின் உண்மையான நிலைமையை அந்த கடிதத்தில் விளக்கவில்லை. வருகிற பாராளுமன்ற தேர்தலில் பா.ஜ.க இந்தியா முழுவதும் 400 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெறும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# மதுராந்தகம் அருகே துரியோதனன் படுகளம் ஏராளமான பொதுமக்கள் பங்கேற்பு



**செங்கல்பட்டு , ஜூலை,11_**

செங்கல்பட்டு, மாவட்டம் மதுராந்தகம் அடுத்துள்ள அருங்குணம் கிராமத்தில், உள்ள அருள்மிகு திரௌபதி அம்மன் கோவில் உள்ளது இக்கோவிலில் ஆண்டுதோறும் அக்னி வசந்த பிரம்மோத்ஸவ விழா நடைபெற்றது. இந்த நிலையில் இந்த ஆண்டு அக்னி வசந்த விழாவை, முன்னிட்டு கடந்த மாதம் 23 ஆம் தேதி கொடி ஏற்றத்துடன் அக்னி வசந்த திருவிழா துவங்கியது. இதனை ஒட்டி தினமும் மகாபாரத சொற்பொழிவு நடைபெற்று வந்தது. மேலும் தினமும் கவி சொற்பொழிவு நடைபெற்று வந்தது அதேபோன்று தினமும் இரவு மகாபாரத கூத்து நடைபெற்று வந்தது. ஏராளமான கிராம மக்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

விழாவில் முக்கிய அம்சமாக கருதப்படும், துரியோதனன் படுகளம் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் புராண கதைகளில் வரும் அர்ஜுனன் பீமன் மற்றும் துரியோதனன் ஆகிய வேடங்களை அணிந்து வந்த கூத்து களஞ்சர்கள் வீதிகளில் கூத்தாடிக் கொண்டே, இதிகாச வரலாற்றை மக்கள் முன் நடித்துக் காட்டினர். இதனைத் தொடர்ந்து பீமன் வேடமிட்ட கூத்து கலைஞர், மிக பிரம்மாண்டமாக அமைக்கப்பட்டிருந்த துரியோதனன் பொம்மை மீது ஏறி அமர்ந்து தொடையில் பீமன் அடிப்பது போன்று, தத்துரூபமாக கலைஞர்கள் நடித்துக் காட்டினர். இந்த விழாவில் ஏராளமான பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் கலந்து கொண்டனர்.



காரைக்கால் மாவட்டம் நெடுங்காடு தொகுதிக்குட்பட்ட கோட்டுச்சேரி பகுதியில் சமூக ஆர்வலர் டாக்டர் விக்னேஸ்வரன் மக்கள் இயக்கம் சார்பில் பல்நோக்கு மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் டாக்டர் விக்னேஸ்வரன் தலைமையில் சர்க்கரை நோய் சிகிச்சை, எலும்பு முறிவு, பொது மருத்துவம், பல் மருத்துவம், கண் மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு துறைகளை சேர்ந்த சிறப்பு மருத்துவர்கள் செவிலியர்கள் இம்முகாமில் கலந்து கொண்டனர். முகாமில் கலந்து கொண்டு சிகிச்சை பெற்ற நோயாளிகளுக்கு ஐந்து நாட்களுக்கு இலவச மருந்து மாத்திரைகள் மற்றும் எம்ஆர்ஐ, சிடி ஸ்கேன் செய்பவர்களுக்கு 50% தள்ளுபடி செய்து தரப்பட்டது. இதில் சுமார் 300க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

## அரசு சார்பில் வழங்கப்படும் இலவச மனை பட்டாவை

# அமைச்சரின் பிறந்த நாளில் வழங்குவதை தவிர்க்க வேண்டும் என மாவட்ட ஆட்சியரிடம் காங்கிரஸ் கட்சி மனு



காரைக்கால், ஜூலை,11

காரைக்கால் மாவட்டம் நெடுங்காடு தொகுதிக்கு உட்பட்ட ராஜீவ் நகர், குரும்பகரம், மணல்மேடு உள்ளிட்ட பகுதிகளில் ஆதிதிராவிட நலத்துறை மற்றும் வருவாய்த்துறை மூலம் வழங்கப்படும் இலவச மனை பட்டாக்களை புதுச்சேரி போக்குவரத்து துறை அமைச்சர் சந்திர பிரியங்கா தனது பிறந்தநாளன்று வழங்க உள்ளதாக தகவல் வெளியானதை அடுத்து அரசு சார்பில் இலவசமாக வழங்கப்படும் மனை பட்டாக்களை அமைச்சரின் பிறந்த நாள் அன்று வழங்கக் கூடாது எனவும், ஏற்கனவே தனது ஆதரவாளர்களுக்கு இலவச மனை பட்டாவை கொடுத்ததாகவும் அவர்கள் இலவச மனை பட்டங்களை விற்று விட்டதாகவும் குற்றம் சாட்டினர்.

எனவேமாவட்ட நிர்வாகம் சரியாக ஆய்வு செய்து உரிய பயனாளிகளுக்கு இலவச மனை பட்டாவை வழங்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அதேபோல விதவைகள் ஊக்கத்தொகை, முதியோர் ஊக்கத்தொகை, ஊனமுற்றோர் ஊக்கத்தொகை, கட்டிட தொழிலாளர்கள் ஊக்கத்தொகை வழங்கப்படும் விண்ணப்ப படிவங்களில் ஒட்டப்படும் போட்டோக்களை தங்களது கட்சி பேனர்களில் உரியவர்களின் அனுமதி இன்றி பயன்படுத்துவதாகவும் அமைச்சர் மீது குற்றம் சாட்டி உள்ளனர் இதற்கு மாவட்ட ஆட்சியர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் மாவட்ட ஆட்சியர் சந்தித்து மனு அளித்து கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதில் காங்கிரஸ் கட்சி மாவட்ட தலைவர் சந்திரமோகன், வட்டார காங்கிரஸ் தலைவர் மாறன், மாவட்ட இளைஞர் காங்கிரஸ் தலைவர் ரஞ்சித் உள்ளிட்ட காங்கிரஸ் கட்சியினர் கலந்து கொண்டனர். உரிய நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் நெடுங்காடு காங்கிரஸ் கமிட்டி சார்பிலும் இளைஞர் காங்கிரஸ் சார்பிலும் மாபெரும் போராட்டம் நடத்தப்படும் எனவும் அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.



காரைக்கால் மாவட்டம் கோட்டுச்சேரி வ உ சி மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களுக்கு காலையில் பால் வழங்கும் திட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்ட அடுப்பு பழுதடைந்து மாணவர்களுக்கு காலையில் பால் வழங்குவதில் சிரமம் ஏற்பட்டது. இந்நிலையில் பள்ளியின் துணை முதல்வர் மூலம் இதுகுறித்து அறிந்த காங்கிரஸ் கட்சி பொறுப்பாளர்கள் தேன்மொழி, பாரதி ஆகியோர் இணைந்து சுமார் 10,000 மதிப்பிலான புதிய பால் காய்ச்சும் அடுப்பு மற்றும் மாணவர்கள் பால் அருந்துவதற்கு ஏதுவாக 100 டம்ளர்களையும் வழங்கினர். இந்நிகழ்ச்சி காங்கிரஸ் கட்சி மாவட்ட தலைவர் சந்திரமோகன் முன்னிலையிலும் வட்டார காங்கிரஸ் தலைவர் மாறன் தலைமையிலும் மற்றும் ரகுபதி, தட்சிணாமூர்த்தி, தேவகி, திலகவதி, பத்மினி ஆகியோர் அடுப்பு மற்றும் டம்ளர்களை பள்ளியின் முதல்வரிடம் வழங்கினர்.



சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் மேற்கு கழுகர் கடை என்னும் ஊரில் காளிமுத்து வயது (41) மனைவி பூங்கொடிஆவர், இவர்களுக்கு மகன் ஆதிபிரபு (15), மகன் சேங்கைவேல் (14),மகள் செல்வராணி (12) ஆகியோர் உள்ளனர். காளிமுத்து என்பவர் 15 வருடமாக மின் ஒப்பந்த ஊழியராக திருப்புவனம் மேற்கு பகுதியில் பணிபுரிந்து வருகிறார் , 06.07.2023 அன்று மாதாந்திர மின் பராமரிப்பு காரணமாக தென்னை மரத்தில் எறி வேலை செய்து கொண்டிருந்த போது தவறுதலாக கீழே விழுந்து விட்டார். கீழே விழுந்தவுடன் அவர் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார், தற்போது அவருக்கு இடுப்பு முதல் கால் வரை உள்ள பகுதிகள் செயல் இழந்துவிட்டது, தற்போது அவர் அரசு ராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

# திருநாவலூர் மேற்கு ஒன்றியம் சார்பில் கலைஞரின் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம்



*கள்ளக்குறிச்சி, ஜூலை,11_*

*கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட திருநாவலூர் மேற்கு ஒன்றிய திமுக சார்பில் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் களமருதூர் கிராமத்தில் நடைபெற்றது.*

*இக்கூட்டத்திற்கு திருநாவலூர்மேற்குஒன்றிய திமுக செயலாளரும், வேளாண்மை ஆத்மகுழுத் தலைவருமான கேவி முருகன் தலைமையில் உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் மணிக்கண்ணன் முன்னிலையில் ,சிறப்பு அழைப்பாளராக, தலைமைதிமுகபேச்சாளர் கந்திலி கரிகாலன் கலந்துகொண்டு தமிழக அரசின் இரண்டாண்டு சாதனைகளை பொதுமக்களிடையே எடுத்துக்கூறி சிறப்புரை ஆற்றினார்.*

*இந்நிகழ்ச்சியில் முன்னாள் மாநில பொதுக்குழு உறுப்பினர் ஜெகதீசன், ஒன்றிய குழுத்தலைவர் சாந்தி, ஒன்றிய குழு துணைத் தலைவர் ராமலிங்கம், மாவட்ட பிரதிநிதிகள் சுந்தரமூர்த்தி, மணிகண்டன், ஒன்றிய பொருளாளர் ஐயப்பன், களமருதூர் ஒன்றிய குழு உறுப்பினர்வெங்கடேசன், ஒன்றிய அவைத்தலைவர் சக்திவேல்,ஒன்றியதுணைச் செயலாளர்கள் வீரப்பன், அம்மாசி, ஒன்றிய தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் பார்த்திபன், ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் சுரேஷ், திலகராஜ், சேதுபதி, சிவக்குமார், மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் கண்ணாயிரம், கிளை திமுக செயலாளர்கள் கோவிந்தன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, கிளை திமுக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.*



தென்காசி மாவட்ட ஒன்றிய கூட்டமைப்பு தலைவர் தி.க.பாண்டியன் தலைமையில் ஆலங்குளம், கீழப்பாவூர் ஊராட்சி மன்றத் தலைவர்கள் கூட்டம் ஆலங்குளத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஆகஸ்ட் 5-ம் தேதி டெல்லியில் சிறந்த சாதனையாளர் விருது வழங்கும் விழாவில் கலந்து கொள்வது என முடிவு செய்யப்பட்டது.




மதுரை கண்ணனேந்தல் பகுதியில் உள்ள சக்தி நகரில் ஷங்கர் இருதய பராமரிப்பு மையம் யூனிட் 2 என்ற புதிய மருத்துவமனை துவங்கப்பட்டது. இந்த மருத்துவமனையின் சிறப்பு அம்சம் இருதயம் சம்பந்தப்பட்ட அனைத்து டெஸ்ட்களும் சிறந்த முறையில் எடுத்து தரப்படும். மருத்துவமனையில் போர்டு பலகையில் "உங்கள் இதயம் எங்கள் பாதுகாப்பில்" என்ற வாசகம் பொதுமக்களை ஈர்க்கத்தக்கதாக உள்ளது. மருத்துவமனை வளாகத்தில் டாக்டர். எஸ். முருகன், டாக்டர் எஸ்.எம். சங்கர் ராஜன், டாக்டர் சாந்தி முருகன் ஆகியோர் உள்ளனர்.



புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி ஸ்ரீ தர்மசாஸ்தா ஆலயத்தில் வருடாபிஷேகம் நடைபெற்றது.இதில் சுவாமி ஐயப்பன் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு சிறப்பு அபிஷேகமும் ,தீபாராதனையும் நடைபெற்றது.இதில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்,பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

# ஸ்ரீ சர்வசக்தி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேக விழா



*திருவள்ளூர் , ஜூலை,11_*

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், மீஞ்சூர், வள்ளுவர் நகரில் எழுந்தருளி அருள் பாலித்து வரும் அருள்மிகு ஸ்ரீ சர்வ சக்தி விநாயகர் ஆலய புனராவர்த்தன ஜீர்ணோத்தாரண மகா கும்பாபிஷேகம், சோபகிருது வருடம், ஆனி மாதம் ஞாயிற்றுக்கிழமை, சப்தமி திதி, உத்திரட்டாதி நட்சத்திரம், சித்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் வெகு விமர்சையாக நடைபெற்றது.

கும்பாபிஷேக விழாவினை தொடர்ந்து, தீபாராதனை, தீர்த்த பிரசாதம் வழங்குதல், மகா அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து சிறப்பு அன்னதானமும் வழங்கும் நிகழ்வும் நடைபெற்றது. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பொன் ராஜா சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு கும்பாபிஷேக விழாவினை சிறப்பித்தார் கும்பாபிஷேக விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் அருண்குமார்,ஜோதிமணி,15வது வார்டு கவுன்சிலர் பரிமளா அருண்குமார் மற்றும் ஆலய தர்மகர்த்தா ஏ.வரதராஜன், ஆலய திருப்பணி குழுவினர், வள்ளுவர் நகர் குடியிருப்போர் நல சங்கத்தினர் மற்றும் வள்ளுவர் நகர் பொதுமக்கள் சிறப்பாக செய்திருந்தனர். கும்பாபிஷேக விழாவினைத் தொடர்ந்து அன்று இரவு ஊஞ்சல் திருக்காட்சியும் நடைபெற்றது.

# பேருந்தின் மீது சாய்ந்த மின்கம்பம்



**செங்கல்பட்டு , ஜூலை,11-**

செங்கல்பட்டு மாவட்டம் கல்பாக்கம் அடுத்த கொடூர் கிராமத்தில் இருந்து சென்னை நோக்கி சென்று கொண்டிருந்த அரசு பேருந்து மீது சாலையின் ஓரம் இருந்த பழுதடைந்த மின் கம்பம் திடீரென சாய்ந்தது.

மின்கம்பம் பழுதான நிலையிலும் மின் ஒயர்கள் தாழ்வான நிலையில் இருந்த காரணத்தால் அரசு பேருந்தின் மீது மின் கம்பி மாட்டிக்கொண்டு மின்கம்பம் அடியோடு சாய்ந்தது பலமுறை புகார் அளித்தும் மின்வாரித்துறை சரியாக கவனிக்காததால் இந்த விபத்து ஏற்படுத்துள்ளது என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர் உடனடியாக மின்வாரியத்துறை நடவடிக்கை எடுக்ககோரிக்கை வைத்துள்ளனர் மின் கம்பம் சாய்ந்ததில் பேருந்தில் பயணித்தவர்களுக்கு எந்த ஒரு உயிர் சேதம்மும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது இனிமேலாவது பராமரிப்பு பணியில் ஈடுபடுமா இதுபோன்ற விபத்துகளை தடுக்குமா மின்சாரத்துறை என்பது பொதுமக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

# புதுக்கோட்டை மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழுத் தலைவர் சு.திருநாவுக்கரசர் தலைமையில் நடந்தது




**புதுக்கோட்டை , ஜூலை,11-**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில், மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழுக் கூட்டம், மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழுத் தலைவர் மற்றும் திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற மக்களவை உறுப்பினர் சு.திருநாவுக்கரசர் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா, முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்குபின் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுத் தலைவர் மற்றும் திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற மக்களவை உறுப்பினர் தெரிவித்ததாவது; புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள பொதுமக்களின் முன்னேற்றத்திற்காக ஒன்றிய மற்றும் மாநில அரசின் சாh;பில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் ஒன்றிய அரசின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் சுமார் 45 திட்டங்கள் குறித்து மாவட்ட ஆட்சியரகத்தில் அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

பிரதம மந்திரி நுண்ணீர் திட்டம், பாரத பிரதமரின் கிஸான்சம்மான்நிதித்திட்டம், மண்வள அட்டை இயக்கம், பிரதான் மந்தியின் பயிர் காப்பீட்டு திட்டம், பாரம்பரிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம், பிரதம மந்திரி விவசாய நீர்பாசனத் திட்டம், ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி இயக்கம் - தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டம், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம், பிரதம மந்திரி நுண்ணீர் பாசனத் திட்டம், பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம், மின்னணு தேசிய வேளாண் சந்தை, ஊரக மின் மயமாக்கல் திட்டம், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வித்திட்டம், தேசிய சுகாதார இயக்கம், பிரதான் மந்திhp கௌசல் விகாஸ் யோஜனா, தூய்மை பாரத இயக்கம், ஜல் ஜீவன் மிசன், மதிய உணவுத் திட்டம் உள்ளிட்ட 45 திட்டப் பணிகள் விபரங்கள், ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி விபரம், செலவு செய்யப்பட்ட நிதி விபரம், பணி முன்னேற்றம் மற்றும் நடைபெற்று வரும் பணிகள், முடிவுற்றப் பணிகள் குறித்து சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுடன் கேட்டறிந்து ஆய்வு செய்யப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பகுதி மக்களும் பயன்பெறும் வகையில் பரவலாக மேற்கொள்ளவும், அரசின் திட்டங்கள் ஏழை, எளிய பொதுமக்களை சென்றடையும் வகையில் முன்னுரிமை அளிக்க வேண்டும் என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம். அப்துல்லா, கரூர் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜோதிமணி, கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் சின்னத்துரை, அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் ராமச்சந்திரன், மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் ஜெயலட்சுமி தமிழ்செல்வன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதப்பிரியா, மாவட்ட இயக்க மேலாண்மை அலகு திட்ட இயக்குநர் ரேவதி, உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள்மற்றும்அனைத்துத் துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# திருமங்கலத்தில் நியாய விலைக் கடை விற்பனையாளர்கள், பணியாளர்கள் 50–க்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டம்



*மதுரை,ஜூலை.11-*

*மதுரை மாவட்டம் திருமங்கலம் ராஜாஜி சிலை முன்பு , திருமங்கலம் பகுதியில் உள்ள நியாய விலை கடைகளில் பணி புரியும் விற்பனையாளர்கள் மற்றும் பணியாளர்கள் / அரசின் கவனத்தை ஈர்க்க கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.*

*நியாயவிலை கடைக்கு மக்களுக்கு வழங்கக்கூடிய பொருட்களின் எடை சரியாக எடை போட்டு அனுப்பவும், தனித்துறை அமைக்க கோரியும், 10 ஆண்டுகள் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு சிறப்பு ஊதியம் வழங்கப்படவேண்டும் என பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் குரல் எழுப்பினர், இப்*


*போராட்டத்தில் மதுரை மாவட்ட நியாயவிலைக்கடை பணியாளர்கள் சங்கச் செயலாளர் செல்லதுரை மற்றும் பல நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.*

# புதுக்கோட்டை அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி அருகே அசாதாரண சூழ்நிலை மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க கோரிக்கை

**புதுக்கோட்டை , ஜூலை.11-**

புதுக்கோட்டை அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி அருகே அசாதாரண சூழ்நிலை நிலவுவதால் பள்ளி செல்லும் பிள்ளைகளின் பெற்றோர் மிகுந்த கவலையடைந்துள்ளனர். மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்துள்ளது.






புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையம் அருகே வீட்டு வசதி வாரியத்தின் சார்பாக 1980 ம் ஆண்டு சுமார் 300 குடும்பங்கள் வசிக்கும் அளவு அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டது. இந்த கட்டிடங்கள் கட்டப்பட்டு பல வருடங்கள் ஆனதாலும் இந்த கட்டிடத்தின் பல்வேறு பகுதிகள் சேதமடைந்த நிலையில் அங்கு வசிப்பவர்கள் வெளியேற்றப்பட்டு தற்பொழுது அடுக்கு மாடி கட்டிடங்கள் மட்டும் இடிக்கப்படாமல் உள்ளது.

இந்த வீட்டு வசதி வாரிய குடியிருப்புகள் அருகே ராணியார் அரசு மேல்நிலைப்பள்ளி உள்ளது. இந்தப் பள்ளியில் மாவட்டம் முழுவதிலிருந்து சுமார் 1700 மாணவிகள் 6ம் வகுப்பில் இருந்து தொடங்கி பிளஸ் டு வரை படித்த செல்கின்றனர். இந்த பள்ளியில் முழுக்க முழுக்க மாணவிகள் மட்டும் படித்து செல்கின்றனர். இந்தப் பள்ளி அருகிலே அரசு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பல பாழடைந்த நிலையில் ஆள் அரவமற்ற பகுதியாக உள்ளது.

இந்த பகுதியில் இரவு நேரங்களில் அதிக அளவில் சமூக விரோதிகள் நடமாடும் பகுதியாகவும் மற்றும் பகலில் திறந்த வெளி மது கூடமாகவும் மாறி வருகிறது. அந்த கட்டிடங்களை சுற்றி அதிக அளவில் செடி கொடிகள் முள் புதர்கள் வளர்ந்து பாம்பு, தேள், பூரான் உள்ளிட்ட விஷ ஜந்துக்கள் உறைவிடமாக மாறியும் உள்ளது. நகரில் உள்ள பெரும்பாலான குப்பைகள் இந்த பகுதியில் கொட்டப்படுகிறது. இந்த குப்பைகளால் பள்ளிக்கு வரும் மாணவிகள் துர்நாற்றத்தால் பாதிக்கப்படுகின்றனர். அடுக்குமாடி குடியிருப்புகளில் பகல் நேரங்களிலும் முகம் தெரியாத அந்நியர்கள் ஜோடியாக உள்ளே சென்று வருகின்றனர்.

பள்ளி தொடங்கும் காலை வேலையிலும் வகுப்புகள் முடியும் மாலை நேரத்திலும் தவறான எண்ணத்தோடு சில வாலிபர்கள் இந்த பகுதியை வட்டமிட்டு வருகின்றனர். இத்தகையவர்களின் நடமாட்டத்தை கண்காணிக்கும் வகையில் போலீஸ்ரோந்துவந்துசெல்ல வேண்டும் என்பது பள்ளி ஆசிரியர்களின் விருப்பமாக உள்ளது. மேலும் பள்ளி அருகிலேயே மூடப்படாத மிகப்பெரிய கிணறு ஒன்று அந்தப் பகுதிகளில் சென்று வரும் மாணவிகள் உள்ளிட்ட பொதுமக்களுக்கு அச்சுறுத்தலை உண்டாக்குகிறது. புதுக்கோட்டையில் அதிக எண்ணிக்கையில் பெண் குழந்தைகள் படிக்கும் புகழ்பெற்ற ராணியார் மகளிர் மேல்நிலைப்பள்ளி அருகே பாதுகாப்பற்ற சூழ்நிலை நிலவுவது சமூக ஆர்வலர்கள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்களிடையே அச்சத்தையே உண்டாக்குகிறது. இந்த பகுதியில் தான் அரசு விழி இழந்தோர் பள்ளி, காது கேளாதோர் பள்ளி, அரசு ஆதரவற்றோர் பள்ளி ஆகியவை செயல்பட்டு வருகிறது.

நகரின் முக்கிய பகுதியில் இடிக்கப்படாமல் உள்ள இந்த அடுக்குமாடி குடியிருப்புகள் அகற்றப்பட்டு ராணியார் மகளிர் மேல்நிலைப்பள்ளி மாணவிகளின் பாதுகாப்பை மாவட்ட நிர்வாகம் உறுதி செய்ய வேண்டும் என வலியுறுத்துகிறது. புதுகை வரலாறு.

# ரோட்டரி சங்கம் சார்பில் மாத்தூர் வள்ளலார் மாணவர் இல்லத்திற்கு சமையல் பொருட்கள்

**புதுக்கோட்டை , ஜூலை.11-**

புதுக்கோட்டை சென்ட்ரல் ரோட்டரி சங்கத்தின் சார்பாக மாத்தூர் வள்ளலார் மாணவர் இல்லத்திற்கு 100கிலோ அரிசி மற்றும் சமையல் பொருட்கள் வழங்கப்பட்டது.



இந்நிகழ்விற்கு சங்கத்தின் தலைவர் பொறியாளர் கார்த்திகேயன் தலைமை தாங்கினார். முன்னாள் ஆளுநர் ஜெய் பார்த்திபன், திட்டத்தலைவர் ஜெய்சன் கீர்த்தி ஜெயபாரதன், இணைச் செயலாளர் சோமசுந்தரம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சங்கத்தின் செயலாளர் சரவணன் வரவேற்புரையாற்றினார்.

ரோட்டரி மாவட்டம் 3000த்தின் துணை ஆளுநர் கதிரேசன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாத்தூர் வள்ளலார் மாணவர் இல்லத்திற்கு 100கிலோ அரிசி மற்றும் சமையல் பொருட்களை இல்லத்தின் நிர்வாகி ரகுபதியிடம் வழங்கினார். மேலும் இல்லத்தில் உள்ள மாணவர்களுக்கு மதியம் சிறப்பு உணவு வழங்கப்பட்டது.

நிகழ்விற்கான ஏற்பாடுகளை சங்க பொருளாளர் பொறியாளர் பெர்லின் தாமஸ் மற்றும் சங்கத்தினர் செய்திருந்தனர். நிறைவில் திட்ட இயக்குநர் ஓவியர் ரவி நன்றி கூறினார்.

# பொதுமக்கள் பயன்படுத்தும் குளம் கழிவுநீர் சாக்கடை சேமிப்பு கிடங்காக மாற்றிய அவலம்

பொன்னமராவதி, ஜூலை.11-

புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி மிகவும் பிரசித்தி பெற்ற உடைய பிராட்டி பிடாரி அம்மன் கோவில் ஊரணியை சில நாட்களுக்கு முன்னதாக தூர்வாரி. தூய்மைப்படுத்தி, வர்ணங்கள் பூசி தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் குளிப்பதற்கு ஏதுவாக நகரத்தார்கள் ஊரணியை தூர்வாரி சுத்தம் செய்து கொடுத்த நிலையில். பொதுமக்கள் தொழிலாளிகள் குளிப்பதற்கு பயன்படுத்திய குளம் தற்போது அப்பகுதி கழிவுநீர் சேமிக்கும் சாக்கடைக்கிடங்காக மாறியுள்ளது.




நல்லது செய்த நகரத்தார்களும் அதை கழிவுநீர் சாக்கடை சேமிப்பு கிடங்காக மாற்றிய பேரூராட்சிநிர்வாகமும். என தொழிலாளிகளும் பொதுமக்களும் மற்றும் சமூக ஆர்வலர்களும் வரலாற்று சிறப்புமிக்க ஊரணியை மீண்டும் மக்கள் குளிப்பதற்கு பயன்படுத்தும் வகையில் துரித நடவடிக்கை மேற்கொண்டு மீண்டும் மக்கள் பயன்பாட்டிற்கு சீரமைத்து தர வேண்டும் என கோரிக்கை முன் வைத்தனர்.

# புதுக்கோட்டை ரோட்டரி சங்கத்தின் தலைவராக கேஎல்கேஎஸ் ராஜாமுகமது பதவி ஏற்றுக்கொண்டார்



**புதுக்கோட்டை , ஜூலை.11-**

பாரம்பரியமிக்க புதுக்கோட்டை ரோட்டரி சங்கத்தின் தலைவராக கேஎல்கேஎஸ் ராஜாமுகமது பதவி ஏற்றுக்கொண்டார். அவருக்கு ஆளுநர் ஆனந்த ஜோதி பணியேற்பு செய்து வைத்தார்.

புதுக்கோட்டை ரோட்டரி சங்கத்தின் 71 ஆம் ஆண்டு பணியேற்பு விழா சத்தியமூர்த்தி நகரில் உள்ள பேக்கரி மஹாராஜ் திருமண மஹாலில் நடைபெற்றது. விழாவில் ரோட்டரி ஆளுநர் ஆனந்தஜோதி, மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம். அப்துல்லா, தமிழக அரசின் தமிழ் செம்மல் விருதாளர் கவிஞர் தங்கம்மூர்த்தி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு ராஜாமுகம்மதுவிற்கு பணியேற்பு செய்து வைத்தனர்.

அவரைத் தொடர்ந்து செயலாளராக பல் மருத்துவர் டாக்டர் ராம் பிரகாஷ், பொருளாளராக அருண் ஆகியோர் பணியேற்று கொண்டனர். முன்னாள் ஆளுநர் சொக்கலிங்கம், மண்டல பிரதிநிதி ஆரோக்கியசாமி, துணை ஆளுநர் ஜெயக்குமார், முன்னாள் தலைவர் பிரகாஷ் உள்ளிட்டோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். விழாவில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ரோட்டரி சங்கங்கள் இதர மாவட்டங்களில் இருந்து வருகை தந்திருந்த ரோட்டரி சங்க நிர்வாகிகள் புதிய நிர்வாகிகளை வாழ்த்தி சிறப்பித்தனர்.

# திருநெல்வேலி மாவட்டம் பணகுடி நூலகத்தில் வாசகர் தேர்தல் நடைபெற்றது



தென்காசி, ஜூலை.11-

திருநெல்வேலி மாவட்டம் பணகுடியில் நூலகத்திற்கு புதிய இணைப்பு கட்டிடம் கட்ட தமிழக சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு விடம் மனு அளிப்பதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பணகுடி நூலகத்தில் வாசகர் தேர்தல் நடைபெற்றது, இதில் வாசகர் வட்டத் தலைவராக அந்தோணி ராஜா தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டனர், துணைத் தலைவராக முத்துக்குமார் மற்றும் செயற்குழு உறுப்பினராக 13 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர், தனலட்சுமி பேரூராட்சி மன்றத் தலைவி தலைமையில் எம். சங்கர குமார்,மு.க. மாணிக்கம், சுப்பையா, ஆனந்தி ராஜேஷ்,பூங்கோதை நிர்வாக குழு உறுப்பினர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் ஆகஸ்ட் 15-ல் கொடியேற்று விழா நிகழ்ச்சி சிறப்பான முறையில் நடத்துவது என நிகழ்ச்சிக்கு தனலட்சுமி, பணகுடி காவல் நிலைய ஆய்வாளர், வருவாய்த்துறை அதிகாரி ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர்.

நூலகத்தில் வாசகர்களாக மாணவர்களை உறுப்பினர்களாக சேர்க்க வேண்டும், படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு பயிற்சி புத்தகங்கள் குரூப் 4, ஐ ஏ எஸ், ஐ பி எஸ் தேர்வு கைடுகள் படித்து பயன் பெற நூலகத்தில் மாணவர்களை அதிக கவனம் செலுத்தி பெற்றோர்களும் ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் என கூட்டத்தின் வாயிலாக கேட்டுக் கொள்ளப்பட்டது. மு.க. மாணிக்கம் அனைவருக்கும்நன்றி கூறி நிறைவு செய்தார், மேலும் இந்நிகழ்ச்சியில் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# கறம்பக்குடியில் அங்கன்வாடி ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

கறம்பக்குடி, ஜீலை. 11-

கறம்பக்குடியில் தமிழ்நாடு அங்கன்வாடி ஊழியர் மற்றும் உதவியாளர் சங்கத்தின் சார்பில் 100கும் மேற்பட்டோர் காலி பணியிடங்களை நிரப்பிட வலியுறுத்தியும் அங்கன்வாடி மையங்களை இணைப்பு என்கிற பெயரில் மூடக்கூடாது என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கறம்பக்குடியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்



புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி சீனிகடை முக்கத்தில் தமிழ்நாடு அங்கன்வாடி ஊழியர் மற்றும் உதவியாளர் சங்கத்தின் சார்பில் அங்கன்வாடி ஒன்றிய பொறுப்பாளர் அற்புத மேரி, முன்னாள் ஒன்றிய பொறுப்பாளர் மாரியம்மாள், மாவட்ட பொருளாளர் ரஞ்சிதா ஆகியோர் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் காலி பணியிடங்களை நிரப்ப வேண்டும், இணைப்பு என்கிற பெயரில் அங்கன்வாடி மையங்களை மூடக்கூடாது,

1993 அங்கன்வாடி ஊழியர்களுக்கு மேற்பார்வையாளர்களாக பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும், ஐந்தாண்டு பணி முடித்த குறுமைய ஊழியர்களுக்கும் 10 வருடம் பணி முடித்த உதவியாளர்களுக்கும் உடனடியாக பதவி உயர்வு வழங்க வேண்டும், அங்கன்வாடியில் அதிகமான பணி சுகாதாரத்துறை பணிகள் செய்யப்படுகின்றன.

அதனால் அங்கன்வாடி ஊழியர்களுக்கு 42 வயதில் வி.ஹெச்.என் பயிற்சி கொடுக்கப்பட்டு அவர்களுக்கு கிராமப்புற செவிலியர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டு வந்தது தற்போது அதை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. உடனடியாக அந்த பதவி உயர்வை வழங்கிட வேண்டும், மகப்பேறு விடுப்பு அரசு பெண் ஊழியர்களுக்கு வழங்குவதுபோல் ஒருவருடம் வழங்க வேண்டும், குறைந்த ஊதியம் பெறும் ஊழியர்கள் மையத்தை நடத்த வட்டிக்கு கடன் வாங்கும் நிலையை உணர்ந்து அரசு முன் பணம் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் மற்றும் அகில இந்திய அளவில் கருப்பு தினம் கடைபிடிக்கப்படுவது குறித்தும் ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டது, இந்த ஆர்ப்பாட்டத்தில் 100கும் மேற்பட்ட அங்கன்வாடி ஊழியர்கள் மற்றும் உதவியாளர் சங்கத்தினர் பங்கேற்றனர்.

# தமிழக முதல்வருக்கு புரட்சி பாரதம் கட்சி தலைவர் பூவை.ஜெகன் மூர்த்தி கோரிக்கை

*சென்னை , ஜூலை.11-*

*திமுக தேர்தல் வாக்குறுதிபடி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பகுதிநேர ஆசிரியர்களை மனிதாபிமானத்துடன் பணிநிரந்தரம் செய்ய வேண்டும் என புரட்சி பாரதம் கட்சி தலைவர் பூவை.ஜெகன் மூர்த்தி எம்எல்ஏ அறிக்கை வெளியிட்டுள்ளார்.அதில் அவர் கூறியிருப்பதாவது:-*

*தமிழக அரசு பள்ளிகளில் பகுதிநேர ஆசிரியர்களாக கணினி, ஓவியம், உடற்கல்வி, தையல், இசை, தோட்டக்கலை, கட்டிடக்கலை, வாழ்வியல்திறன் ஆகிய பாடங்களில்பணியாற்றும் அனைவரையும், தமிழக முதல்வர் திமுக தேர்தல் வாக்குறுதி 181-ல் குறிப்பிட்டபடி பணிநிரந்தரம் செய்ய வேண்டும்.*

*விலைவாசி ராக்கெட் போல் ஏறிவிட்ட இந்த காலத்தில், ரூபாய் 10ஆயிரம் சம்பளத்தில் குடும்பத்தை நடத்த முடியாமல் தவிக்கின்ற பகுதிநேர ஆசிரியர்களுக்கு மே மாதம் சம்பளம், ஊதிய உயர்வு, இறந்தவர் குடும்பத்திற்கு நிதி போன்றவற்றை உடனடியாக வழங்க ஆணையிட வேண்டும். மனிதாபிமானத்துடன் 12ஆண்டுக்கும் மேல் பணிபுரியும் 12ஆயிரம் பகுதிநேர ஆசிரியர்கள் மீது கருணை கொண்டு காலமுறை சம்பளம் வழங்கி பணிநிரந்தரம் செய்ய வேண்டும். என அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.*

# குற்றாலத்தில் படகு சவாரி துவக்கம்



தென்காசி, ஜூலை.11-

தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் சீசன் தாமதமாக துவங்கிய நிலையில் தற்போது அனைத்து அருவிகளிலும் தண்ணீர் சீராக விழுந்து கொண்டிருக்கிறது.

இதை அடுத்து இங்கு சுற்றுலா பயணிகள் குவிந்த வண்ணம் உள்ளனர். சீசன் காலத்தில் குற்றாலத்தில் ஒரே பொழுது போக்கு அம்சமாக திகழும் படகு சவாரி ஐந்தருவி சாலையில் உள்ள வெண்ணமடக்குளத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகம் சார்பில் துவங்கப்பட்டது. தென்காசி எம்பி தனுஷ், எம். குமார் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் பழனி நாடார் ஆகியோர் முன்னிலையில் ஆஸ்திரேலியாவில் இருந்து வந்திருந்த சுற்றுலா பயணிகள் லிசா மற்றும் கிலெய்ர் ஆகியோர் படகு குழாமை திறந்து வைத்தனர்.

தற்போது குளத்தில் படகுகளை இயக்குவதற்கு போதுமான அளவு தண்ணீர் வந்ததை தொடர்ந்து படகு சவாரி துவக்கப்படும் என அறிவிக்கப் பட்டிருந்தது. இதையடுத்து ஏராளமான சுற்றுலா பயணிகள் ஆர்வத்துடன் படகு சவாரி செய்தனர்,தற்போது 25 படகுகள் கொண்டு வரப் பட்டுள்ளன. இதில் 5 துடுப்பு மூலம் இயக்கும் படகுகளும், மீதமுள்ள 20 படகுகள் பெடல் மூலம் இயக்கப் படும் படகுகளும் ஆகும். இரு நபர் மிதி படகுகளுக்கு 150 ரூபாயும், நான்கு நபர் மிதிபடகுகளுக்கு 200 ரூபாயும், தனிநபர் துடுப்பு படகுக்கு 150 ரூபாயும் நான்கு நபர் துடுப்பு படகுகளுக்கு 250 ரூபாயும் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் குற்றாலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழக மேலாளர் ராஜேஸ்வரி, சுற்றுலா அதிகாரி சீத்தாராமன், உதவி சுற்றுலா அதிகாரி சந்திரகுமார், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் ராமசுப்பிரமணியன், மாவட்ட பஞ்சாயத்து துணை தலைவர் உதய கிருஷ்ணன், தென்காசி நகரத் தலைவர் மாடசாமி ஜோதிடர், வட்டாரத் தலைவர் பெருமாள், பொருளாளர் ஈஸ்வரன், மாவட்ட பொதுச் செயலாளர் ஏஜிஎம். கணேசன் ஹாஜா மைதீன், கண்ணன், நாகராஜ், தேவராஜன் உட்பட அரசுத்துறை அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# பொன்னமராவதி அருகே கொன்னையம்பட்டி ஊராட்சி மன்றத் தலைவரை கண்டித்து பெதுமக்கள் கலெக்டரிடம் கோரிக்கை மனு

பொன்னமராவதி, ஜூலை.11-

புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி அருகே கொன்னையம்பட்டி கிராமத்தில் 600க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இந்நிலையில் இந்த கிராமத்தில் வசிக்கும் தகுதி வாய்ந்த வறுமை கோட்டுக்கு கீழ் வாழும் பயனாளிகளின் பெயர்களை தற்போது எடுத்த கணக்கெடுப்பு பட்டியலில் இருந்து நீக்கிவிட்டு தகுதி இல்லாத பயனாளிகளை வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளதாக இணைத்துள்ளதாகவும், இதனால் உண்மையில் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மக்கள் பாதிப்புக்கு உள்ளாகி உள்ளதாகவும் இதனால் அரசின் சலுகைகள் தங்களுக்கு ஏதும் கிடைக்காமல் போகின்றன என குற்றம் சாட்டி 150 க்கும் மேற்பட்ட அந்த கிராமத்தைச் சேர்ந்த மக்கள் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரை சந்தித்து மனு அளித்தனர்.



அப்போது அவர்கள் கூறுகையில் ஏற்கனவே தங்கள் கிராமத்தை சேர்ந்த 400-க்கும் மேற்பட்ட ஏழை விவசாய குடும்பங்களை சேர்ந்தவர்கள் வறுமை கோட்டிற்கு கீழ் இருந்ததாகவும் ஆனால் தற்போது தவறான கணக்கீடை ஊராட்சி மன்றத் தலைவர் மேற்கொண்டு இதில் 300 பேரை நீக்கிவிட்டு ஊராட்சி மன்றத் தலைவர் உட்பட அவர்களது உறவினர்கள் ஆதரவாளர்கள் என வசதி படைத்த பலரையும் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளதாக தவறான கணக்கீடு பதிவு செய்துள்ளதாகவும், அதிலும் அவரது உறவினர் ஒருவர் அரசு ஊழியராக உள்ள சூழலில் அவரையும் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள பட்டியலில் சேர்த்து உள்ளதாகவும், இதனால் உண்மையில் ஏழை மக்களாக வறுமையில் வாடும் 300க்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த தங்கள் கிராம மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினர்.

மேலும் தாங்கள் வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ளவர்கள் என தற்போது கணக்கீடு எடுக்கப்பட்டுள்ளதால் தங்களுக்கு அரசின் சலுகைகள் கிடைக்காமல் போவதாகவும் இது குறித்து மாவட்ட ஆட்சியர் உரிய விசாரணை மேற்கொண்டு மீண்டும் வறுமைக்கோட்டு பட்டியலை கணக்கீடு செய்து அதில் தகுதி வாய்ந்த பயனாளிகளை சேர்க்க வேண்டும் என்றும் அதேபோல் ஊராட்சி மன்றத் தலைவர் உள்ளிட்ட தகுதி இல்லாத பயனாளிகளை நீக்க வேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

### புதுக்கோட்டை கம்பன் கழகத்தின்

# 48 ஆம் ஆண்டு கம்பன் பெருவிழா பந்தல்கால் முகூர்த்தம் நடப்பட்டது: ஜூலை 14ஆம் தேதி தொடங்குகிறது

**புதுக்கோட்டை , ஜூலை.11-**

கடந்த ஆண்டுகளைப் போல் பல்வேறு சிறப்புகளைக் கொண்டு புதுக்கோட்டை கம்பன் கழகத்தின் 48 ஆம் ஆண்டு பெருவிழா ஜூலை 14ஆம் தேதி வெள்ளிக்கிழமை தொடங்கி ஜூலை 23ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை நிறைவு பெற இருக்கின்றது. இப்பெருவிழாவுக்கான பந்தல்கால் முகூர்த்தம் நகர் மன்றத்தில் நடைபெற்றது.



கம்பன் கழகத் துணைத் தலைவர்கள் எம்.ஆர்.எம் முருகப்பன், பேக்கரி மகராஜ் அருண் சின்னப்பா, பொருளாளர் சி. கோவிந்தராஜன், துணைப் பொருளாளர் கரு ராமசாமி, செயலாளர் ரா.சம்பத்குமார், கூடுதல் செயலாளர் புதுகை ச.பாரதி, இணைச் செயலாளர்கள் காடுவெட்டி குமார், பேராசிரியர் முருகையன், ரா.கருணாகரன், விழா குழு உறுப்பினர்கள் பேராசிரியர் ரவிச்சந்திரன், நிலவை பழனியப்பன், காந்திநாதன் ஒப்பந்தக்காரரர் கர்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர். நிகழ்ச்சியை முத்துக்குமார் குருக்கள் நடத்தி வைத்தார்.

10 நாட்கள் நடைபெறும் கம்பன் பெருவிழாவில் துவக்க நாளான முதல் நாள் வெள்ளிக்கிழமை நிகழ்ச்சிக்கு அமெரிக்கா ஜனநாயக கட்சியின் பொறுப்பாட்சியர் ராஜன் நடராஜன் தலைமை வைக்கிறார். அதனைத் தொடர்ந்து நடைபெறும் அடுத்தடுத்த நாட்களில் உண்டான நிகழ்வுகளில் மும்பை எம்எல்ஏ தமிழ்ச்செல்வன், புதுச்சேரி முன்னாள் சபாநாயகர் சிவக்கொழுந்து, கம்பவாதிரி இலங்கை ஜெயராஜ், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் அரங்க. மகாதேவன், ஆர்.சுரேஷ்குமார், அமைச்சர்கள் ரகுபதி, மெய்யநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருச்சி சிவா, தொல் திருமாவளவன், திருநாவுக்கரசர், எம். எம். அப்துல்லா, சட்டமன்ற உறுப்பினர்கள் விஜயபாஸ்கர், முத்துராஜா. சின்னத்துரை, பட்டிமன்றம் நடுவர்கள் டாக்டர் ஜெய ராஜமூர்த்தி, கு. ஞானசம்பந்தன், பாரதி பாஸ்கர், திருவாரூர் சண்முகவடிவேல், பத்மமோகன், தென்காசி ராமச்சந்திரன், தொழிலதிபர் திண்டுக்கல் ரத்தினம், கவிஞர் மரபின் மைந்தன் முத்தையா, திலகவதியார் திருவருள் ஆதீன கர்த்தர் தயானந்த சந்திரசேகர சுவாமி, திருச்சி முன்னாள் மேயர் சாருபாலா தொண்டைமான், புதுக்கோட்டை கலெக்டர் மெர்சி ரம்யா, உள்ளிட்ட பல்வேறுசிறப்புவிருந்தினர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள் விழாவிற்கான ஏற்பாடுகளை புதுக்கோட்டை கம்பன் கழகத்தின் தலைவர் எஸ். ராமச்சந்திரன், செயலாளர் ஆர். சம்பத்குமார் உள்ளிட்ட கம்பன் கழக நிர்வாகிகள் செய்து வருகின்றனர்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# மக்கள் மது அருந்துவதை நிறுத்துவதால் அரசுக்கு கவலை இல்லை

# தமிழக ஆளுநரை வில்லன் போல் காட்ட திமுக முயற்சி செய்கிறது





# சென்னையில் சீருடையுடன் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட காவலர்


| சென்னை / புதுக்கோட்டை | 11.07.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை
வரலாறு
நாளிதழ்

11.07.2023 செவ்வாய்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

சி. சங்கரன் நாயர் , இந்திய அரசியல்வாதி (பி.1857) (இ.1934)



வி. ஆர். நெடுஞ்செழியன் , தமிழக அரசியல்வாதி (பி.1920) (இ.2000)



பா. ராமச்சந்திரன் , தமிழக அரசியல்வாதி (பி.1921) (இ.2001)



குன்றக்குடி அடிகள் , தமிழக சமய, இலக்கியவாதி (பி.1925) (இ.1995)



## இன்றைய நினைவு நாள்

இரா. இராகவையங்கார் , தமிழக நூலாசிரியர், உரையாசிரியர், கவிஞர், (பி.1870) (இ.1946)



பூ. செந்தூர் பாண்டியன் , தமிழக அரசியல்வாதி (பி.1951) (இ.2015)



## உலக மக்கள் தொகை நாள்